(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | STC.No.201/2022 |

புகார்தார் தரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 1

பெயர் : குமரேஷ்

த/பெ : சுயம்புலிங்கம்

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை** தொடர்ச்சி:–

1) சென்னை, கே.கே நகரில உள்ள ஸ்ரீவிநாயகா டிரேடர்ஸ் உங்கள் சொந்த அக்கா கணவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.மேற்படி கடையிலும் எதிரி சரக்கு கொள்முதல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிறுவனம் அதன் உரிமையாளரை எதிரி தரப்பில் விசாரணை செய்ய ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எதிரி மேற்படி ஸ்ரீவிநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தில் வரவு செலவு வைத்து இருந்தார் என்றாலும் உங்களிடம் வரவு செலவு எதுவும் கிடையாது என்றாலும் சரியல்ல. ஸ்ரீவிநாயகா டிரேடர்சில் அனுப்பட வேண்டிய பணத்தை வரி ஏய்பு செய்ய வேண்டி எதிரி உங்கள் நிறுவனத்திற்கு அனுப்பினார் என்றால் சரியல்ல. எதிரியை நீங்கள் நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்பு நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் எதிரியின் அப்பா பெயர் இதுநாள் வரை தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அப்பா பெயரை நீங்கள் அனுப்பிய ம.சா.ஆ.3 அறிவிப்பிலோ புகாரிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அவரது அப்பா பெயர் தற்போது நினைவில் இல்லை.

2) அப்பா பெயர் கூட அறிமுகம் இல்லாத நபருக்கு ரூ.4013394/– க்கு வரவு செலவு செய்து நிலுவையில் வைத்திருந்ததாக ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. உங்கள் அத்தான் கொடுத்த காசோலையின் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் நிறுவனத்திலிருந்து சுமார் 190 டன் ஈரோடு வரை நீங்கள் விற்பனை செய்து அனுப்பியதாக கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. ஜி.எஸ்.டி வரியை அந்த அந்த நிறுவனம் செலுத்துவது என்றால் சரிதான். எதிரிக்கு நீங்கள் அனுப்பிய பொருட்கள் சென்று சேர்ந்தற்கு ரசீது எதுவும் வைக்கவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் அனுப்பிய ரசீதுதான் எங்களிடம் இருக்கும். ஜி.எஸ்.டி முறையில் வவுச்சர் மூலமாகதான் அனுப்பவேண்டும் என்றால் சரிதான். நீங்கள் அனுப்பியதாக சொல்லும் பொருட்கள் எதுவும் எதிரிக்கு சென்று சேரவில்லை என்றால் சரியல்ல.

3) ரசீதுதில் இண்டர்மிடியட்டர் ஜி.எஸ்.டி நம்பர் கொடுக்க பட வேண்டும் என்றால் சரிதான். ம.சா.ஆ 5 ல் எதிரியின் ஜிஎஸ்டி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இண்டர்மிடியட்டர் நம்பர் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான் பொருட்கள் நேரடியாக அனுப்பட்டதால் இண்டர்மிடியட்டர் நம்பர் இல்லை. பொருட்களை கொண்டு செல்லும் வாகன ஓட்டுநர் மற்றும் வாகன எண் தெரியுமா என்றால் எதிரி வாகனத்தை அனுப்புவார் அதனால் அதை பற்றி எனக்கு முழுவதும் தெரியாது. ம.சா.ஆ.5 ல் குறிப்பிட்டுள்ள வாகனங்கள் மேற்படி தேதியில் ஈரோடு செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் TN 18 AB 0540 என்ற வாகனத்தின் fast tag Statement என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி வாகன எண் TN 18 AB 0540 கடந்த 19–01–2021, 17–02–2021 அன்றும் ஆக இருமுறை திசையன்விளையிலிருந்து ஈரோடு வரை சென்றுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாகனம் அன்றை தினத்தில் செல்லவில்லை என்றால் சரியல்ல.

4) TN 18 AJ 9298 என்ற வாகனம் கடந்த 07–01–2021 அன்று திசையன்விளையிலிருந்து சரக்கு எடுத்து கொண்டு ஈரோடுக்கு எதிரிக்கு சரக்கு கொண்டு சென்றதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி வாகனத்தின் fast tag Statement என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி Statement படி 07 தேதி தியைன்விளைக்கு வந்து

சரக்கு எடுக்கவில்லை என்றால் சரியல்ல. TN 18 AB 0568 என்ற வாகனம் 01-04-2021 அன்று திசையன்விளையிலிருந்து சரக்கு எடுத்து சென்றதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி வாகனம் குறிப்பிட்ட நேரத்தில் திசையன்விளை வரவில்லை என்றால் சரியல்ல. வாகனத்தின் உரிமையாளர் கள் மற்றும் ஓட்டுநர் களை விசாரிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த ம.சா.ஆ 5 ஜி.எஸ்.டி விதிக்கும் e – way bill க்கு முரணானது என்றால் சரியல்ல.

5) எதிரியின் நிறுவனத்திலிருந்து எவ்வித ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெயர் குறிப்பிடாமல் வாகண என்னை குறிப்பிட்டுள்ளதால் நீங்கள் சரக்கு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் எவ்வித பொருட்களும் அனுப்பாமல் உங்கள் அத்தானுக்கு ஆதரவாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை தவிர வேறு காசோலை எதுவும் எதிரி என்னிடம் கொடுக்கவில்லை. எதிரி அனுப்பிய பணம் அனைத்தும் On line payment என்றால் சரிதான். காசோலை உங்கள் அத்தானிடம் இருந்து பெற்றுக்கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல. ஜி.எஸ்.டி பில் தாக்கல் செய்ததால் பொருட்கள் delivery செய்யப்பட்டதாக அர்த்தம் கிடையாது என்றால் சரியல்ல., delivery Chellan ரசீது எதுவும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ம.சா.ஆ 5 மட்டும்தான் கொடுக்கப்படும்.

6) பிரமாணவாக்குமூலத்தில் ம.சா.ஆ. 5 என்பது நிறுவனத்தில் பராமரிக்கப்படும் அடிக்கட்டை ரசீது என்றால் சரிதான். அடிக்கட்டை ரசீதுக்கும் delivery Chellan-னுக்கும் தொடர்பு கிடையாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 1 காசோலையில் எதிரி தமிழிலில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கு ஆங்கிலம் வாசிக்க தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலைக்கும் உங்கள் நிறுவனத்திற்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. உங்கள் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.